අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Adv. Level) Supportive Assessment, 2026

දෙමළ I
தமிழ் I
Tamil I

# புள்ளியிடும் திட்டம்

72 T I

## பகுதி - I

1. (அ)

(i) திணை - பாடாண்திணை
பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு

துறை - இயன் மொழி
'கொடை மடம் படுதல்' அல்லது 'படை மடம் படான்' என அரசனது இயல்பை எடுத்துரைத்தல்

(04 புள்ளிகள்)

(ii) நீர் வற்றிய குளத்தில், அகன்ற வயலிடத்தில், கடலில், களர் நிலத்தில் என எல்லா இடங்களிலும் ஒரே தன்மையாய்ப் பெய்யும் மழையைப் போன்று தன்னிடம் இரந்து கேட்பவர் எத்தகுதியினராயினும் வேண்டியவரா, வேண்டாதவரா, நல்லவரா, கெட்டவரா எனப் பாராது வரையாது கொடுக்கும் இயல்பை உடையவன் என்பதன் மூலம் பேகனின் கொடைச் சிறப்பு வெளிப்படுகிறது. (04 புள்ளிகள்)

(iii) பேகன், வீரம் அல்லாதார், புறமுதுகிட்டார், புண்பட்டவர், மூத்தோர், இளையோர் மேல் போர் தொடுக்காது எதிர் நின்று போராடும் பெரும் வீரரிடத்து மாத்திரம் போர் செய்யும் அறியாமைப் படாத இயல்பு படைத்தவன்.

(04 புள்ளிகள்)

(04 x 03= 12 புள்ளிகள்)

(ஆ)

(i) கட்டிறுக்கமான வில்லை ஏந்திய பெரிய கையை உடையவன் என இராமன் சிறப்பிக்கப்படுதல். (04 புள்ளிகள்)

(ii)

- பதைபதைத்து தரையில் வீழ்தல்.
- பெருகிடும் முத்துமணி போன்ற கண்ணீரால் பூமியை திருமஞ்சனம் ஆட்டுதல்.
- துயரக் கடலில் மூழ்குதல்.

(04 புள்ளிகள்)

(iii) உருவகம் : பருவரற் பரவை

- பரதனது துயரம் கடலிற்கு உருவகிக்கப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

(04 x 03 = 12 புள்ளிகள்)

(12 + 12 = 24 புள்ளிகள்)

**2.** (அ) கிரகித்தல் - பாரதியார் கவிதை

(i)

- பாரதநாட்டின் கவிஞராக போற்றப்படுபவர்.
- உலகப் புகழ்வாய்ந்த கவிதைகளைப் படைத்தவர்.
- பாவலர் பலருக்கும் வழிகாட்டியவர், முன்னோடியாகத் திகழ்ந்தவர்.
- உயர் சிந்தனையைத் தருவதோடு சமூகமாற்றத்தை ஏற்படுத்தத்தக்க கவிதைகளைப் படைத்தவர்.
- சுவை புதிது, சொல் புதிது என கவிதையில் புதுமைகளைப் புகுத்தியவர்.

(04 புள்ளிகள்)

(ii)

- சந்தமும், ஓசையும் நிரம்பியவை.
- புத்தம் புதிய காட்சிகளை விரித்துக் கூறுவன.
- சுவை, சொல்லில் புதுமைத்தன்மை காணப்படல்.
- இன்பச்சுவை நிரம்பியிருத்தல்.
- மேம்பட்ட காதல், வீர உணர்வுகளை தோற்றுவிப்பதாக அமைதல்.
- அற்புதங்களை நிகழ்த்தத் தக்கன.

(04 புள்ளிகள்)

(iii)

- பாரதி என்றொரு தாமரை
- பாரத நாடெனும் வாவி
- இந்த நறுமலர்
- சிந்தனையாம் எனும் வானுலகு
- தாமரைக்காடு
- செந்தமிழ்த் தண்ணறவு
- பாவலராகிய வண்டினம்
- முன்னொரு பூக்கள்
- மாடும் மரங்களும் வண்டினமாகி

(04 புள்ளிகள்)

(iv)

- **கவிஞர் உணர்த்தக் கருதிய விடயம்**
  - பாரதியாரது பாடற்சுவையின் சிறப்பு
- **விடய விளக்கத்தில் உள்ள நயம்**
  - மாடுகள், மரங்கள் வண்டுகளாக உருவகிக்கப்பட்டிப்பதன் மூலம் மாடுகள் மரங்கள் கூட விரும்பி, மயங்கி கேட்குமளவு பாரதியாரின் கவிதைகள் சுவை நிரம்பின.
  - மனிதர்கள் மட்டுமல்ல அ.்.றிணை உயிர்களும் மயங்குமளவு கவிச்சுவையின் சிறப்பு காணப்படுதல் என்பதன் ஊடாக நயம் வெளிப்படல்.

(04 புள்ளிகள்)

(04 x 04=16 புள்ளிகள்)

(ஆ) உரைப்பகுதி

**(i) சமூகத்தை பற்றிய ஸல்மாவின் எண்ண ஓட்டம்**

- முஸ்லிம்கள் சமத்துவம், சகோதரத்துவம் உடையவர்கள்தான் என்றாலும் தான்மட்டும் ஒதுக்கப்பட்டிருத்தல் எனல்.
- பெற்ற தாய் இஸ்லாமிய நடைமுறைகளை ஒழுங்குமுறையாக கடைப்பிடிப்பவர், அவர் வயிற்றில் தான் பிறந்து இருந்தாலும் வேலைக்காரி என்ற காரணத்தால் இழிந்த நிலையில் உள்ளதாக கூறல்.

(04 புள்ளிகள்)

**(ii) தன்னைத் தானே நொந்துகொள்ளும் ஸல்மாவின் மனநிலை**

**வேலைக்காரியான காரணத்தால்**

- ஆசைப்பட்டபடி உடுக்க முடியவில்லை எனல்.
- தன் எண்ணப்படி நடக்க முடியவில்லை எனல்.
- வீட்டு வேலையைத் தவிர வேறு எத்தொழிலும் தெரியாது எனல்.
- வீட்டு வேலைக்காரியாக வாழ்ந்து எதையும் கற்றுக் கொள்ளவில்லை என துயர்ப்படல்.
- வாழ்ந்து முடித்த வாழ்க்கையைத் திருப்பிப் பெறமுடியாது என அங்கலாய்த்தல்.

(04 புள்ளிகள்)

**(iii) ஸல்மா எடுத்த துணிகரமான செயல்கள் கதைக்கருவிற்கு வலுச்சேர்க்குமாறு**

- அடக்கு முறைக்குள்ளாகி வேலைக்காரியாக வாழும் ஏழைப்பெண் அவ்வாழ்க்கையிலிருந்து விலகி சுதந்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் துணிதல் கதைக் கருவாகும்.
- சுதந்திர வாழ்க்கைக்காய் வேலை செய்த வீட்டை விட்டு விலகுதல், தனது வீட்டை நோக்கி செல்லுதல், நெசவு சாலைக்குச் செல்லல் போன்ற துணிகர செயல்கள் கூறப்பட்ட கதைக் கருவிற்கு வலுச்சேர்த்தல்.
- கதையின் திருப்பு முனையாகி கதை முடிவாகவும் அமைந்திருத்தல்.

(04 புள்ளிகள்)

**(iv) கதையின் முடிவிற்கூடாக கதாசிரியர் உணர்த்த முற்பட்ட விடயம்**

- வேலைக்காரியாக வாழும் ஏழைப் பெண் பிள்ளைகள் அடக்குமுறைக்குட்பட்டு இயலாமை உணர்வோடு வாழாது தமக்கான சுதந்திரமான சுயமான வாழ்க்கையை தாமே அமைத்துக் கொள்ளத் துணிதல் வேண்டும்.

(04 புள்ளிகள்)

(04 x 04=16 புள்ளிகள்)

## பகுதி II

**3. (அ) பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதும் (1 – 2 குறள்கள்)**

- அறத்தின் நுண்மையை அறிந்தவர்கள்
- முதிர்ந்த அறிவுடையவர்கள்
- இயற்கையாகவும் செயற்கையாகவும் அரசனை வந்தடைந்த துன்பங்களை நீக்க வல்லவர்கள்
- தீமைகள் இனி வராதவண்ணம் காக்க வல்லவர்கள்

(04 புள்ளிகள்)

**(ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு (3 – 5 குறள்கள்)**

- அரசருக்கு உலகத்திலுள்ள சிறந்த பேறுகள் எல்லாவற்றிலும் பெரியாரைத் துணையாகக் கொள்வது மிகவும் அரிய பேறாகும்.
- படை, அரண் முதலிய பல வலிமைகளை உடையவன் அரசன். எனினும், அவ்வலிமையுடைமைகள் எல்லாவற்றிலும் சிறந்தது பெரியாரது துணையே.
- அரச நிர்வாகம் என்பது அமைச்சர்களின் துணையினாலேயே நடைபெறுவதால், பெரியாராகிய அமைச்சர்களை ஆராய்ந்து அரசர்கள் தக்க துணையாகக் கொள்ள வேண்டும்.

(04 புள்ளிகள்)

**(இ) பெரியாரைக் துணைக்கோடலின் பயன் (6 – 7 குறள்கள்)**

- பெரியாரைத் துணையாகக் கொண்ட அரசனைப் பகைவரால் கெடுக்க முடியாது.
- தீயன கண்டால் அதுபற்றி அஞ்சாமல் இடித்துரைக்கும் பெரியாரைத் துணையாகக் கொண்டவனை, யாரும் கெடுக்க முடியாது.

(04 புள்ளிகள்)

**(ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவிடத்து ஏற்படும் குற்றம் (8 – 10)**

- இடித்துரைக்கவல்ல பெரியாரைக் துணையாகக் கொள்ளாத மன்னன், பகைவர் இல்லாதவிடத்தும் தானே கெட்டழிவான்.
- தம்மைத் தாங்கும் பெரியாரைத் துணைக்கொள்ளாத மன்னர் நிலைக்க முடியாது.
- பலரோடு பகை கொள்வதைக் காட்டிலும் பெரியாரைத் துணைக்கொள்ளாமை பத்து மடங்கு தீமையானது.

(04 புள்ளிகள்)

**(உ) கையாளப்பட்டுள்ள உவமையின் சிறப்பு (9ஆம் குறள்)**

வாணிபத்துக்கு முதல் அவசியம். அவ்வாறே அரசாட்சிக்குப் பெரியாரின் துணை அவசியம். முதல் இல்லாமல் இலாபம் பெற முடியாது. அவ்வாறே பெரியாரின் துணை இல்லாமல் அரச நிர்வாகம் நடத்த முடியாது.

**அல்லது**

உவமானம் - வணிகருக்கு முதல் இல்லாமல் இலாபம் இல்லை.
உவமேயம் - அரசருக்கு பெரியார்துணை இல்லாமல் அரசாட்சி இல்லை.
பொதுத்தன்மை - இன்றியமையாமை

(04 புள்ளிகள்)

(04 X 05=20 புள்ளிகள்)

4. கம்பராமாயணம் - குகப்படலம்

**(அ) பரதனைப் பற்றிய குகனது மனப்பதிவு**

- பெரிய இராச்சியத்தை இராமன் பெற்றுவிடக் கூடாது என்ற சூழ்ச்சியான ஆலோசனையுடன் வட கரையில் படையினருடன் பரதன் உள்ளான் எனல்.
- வஞ்சனையால் அரசாட்சியைக் கைப்பற்றினான் எனல்.
- தனது அண்ணன் என்ற உறவைக் கருதாது வலிமையான இலக்குவன், இராமன் அருகில் நிற்கின்றானே என அஞ்சாது, தன்னையும் இகழ்ந்து, ஒரு பொருட்டாக கருதாது இராமனுடன் போர் செய்ய வருகின்றானே எனல்.
- பழி, பாவம் பற்றி நினைக்காதவன் எனல்.
- பகைவர் யார், நண்பர் யார்? என்பது பற்றி அறியாதவனாயும் உள்ளான் எனல்.
- இவன் புவி ஆள்வானோ? என புவி ஆள்வதில் விருப்புடையவன் எனல்.

(05 புள்ளிகள்)

**(ஆ) குகனது வஞ்சின உரைகள்**

- இராமனது அரசாட்சியை சூழ்ச்சியால் கைப்பற்றிய பரதன் முதலானோரை அம்புகள் தாக்கி அழிக்கும் எனல்.
- அம்புகளுக்குத் தப்பி இராமன் இருக்கும் இடம் போய் விட முடியாது எனல்.
- பெரிய படையைக் கண்டு பின்வாங்கிட மாட்டேன் எனல்.
- இராமனுக்கு உதவாது வாழ்வதைவிட இறத்தல் மேலானது எனல்.
- கங்கையாற்று எல்லையை இவர்கள் கடந்து சென்றுவிட முடியாது எனல்.
- வேடர்கள் விடுகின்ற அம்புகள் மன்னர்களது மார்புகளைத் தைத்து துளைக்கும் எனல்.
- இராமன் மேல் படையெடுத்து செல்வது என்பது தனது உயிரை விட்டபிறகல்லவா முடியும் எனல். வேடர்களும் விடமாட்டார்கள் எனல்.
- உயிர் தனக்கு பெரிதல்ல எனவும் இராமனுக்காக உயிர் துறந்து புகழைப் பெறவும் முனைதல்.
- பரதனது படை பலம் இக்கங்கையைக் கடந்த பிறகுதான் தெரியும் எனல்.

(05 புள்ளிகள்)

**(இ) குகன், இராமன் மேல் வைத்த பேரன்பு**

- உயிர்த்துணைவன் என இராமனைக் கூறுதல்.
- அஞ்சன வண்ணன் என இராமனைச் சிறப்பித்தல்.
- அரிய உயிர்த்தலைவன் எனல்.
- தோழமை என இராமன் கூறிய சொல் ஒப்பற்ற சொல் எனல்.
- என் துணை எனல்.
- இராமனுக்காகப் போர் செய்து உயிரை விடவும் முனைதல்.
- இராமனுடன் அன்று போகாமல் இருந்ததுவும் நன்றாயிற்று எனவும் இங்கு இருந்தே இராமனுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடிப்பேன் எனவும் கூறல்.
- கொடைக் கையன் எனப் புகழ்தல்.
- என் நாயகன் எனல்.
- தவசிகளுக்கு சுற்றமாகி காட்டில் வாழ்பவன் என சிறப்பித்தல்.

(05 புள்ளிகள்)

**(ஈ) சுமந்திரன், குகனைப் பற்றி பரதனுக்குக் கூறியவை**

- கங்கையாற்றின் இரு கரைப்பகுதிகளையும் தனது ஆட்சிக்கு உட்படுத்தி இருப்பவன்
- கணக்கற்ற நாவாய்களை உடையவன்
- இராமனுக்கு உயிர்த் துணைவன்
- உயர்ந்த தோள்களை உடையவன்
- வெங்கரியின் ஏறு அனையான் எனல்
- வில்லைக் கையில் பிடித்துள்ள பெரிய சேனையை உடையவன் எனல்
- நறுமணமிக்க மாலையை அணிந்தவன்
- இருளைக் கண்டாற்போன்ற கருநிற மேனியை உடையவன்
- இராமன் மீது எல்லையில்லாத பேரன்பை உடையவன்

(05 புள்ளிகள்)

(5 X 4= 20 புள்ளிகள்)

5. நெருக்கடி – சிறுகதை

**(அ) சரவணமுத்துவின் ஏழ்மை நிலை**

- அதிகமான குழந்தைகள்
- குழந்தைகளுக்கு அடிக்கடி நோய் ஏற்பட்டமை
- குழந்தைகளின் உடையும் உடையின்மையும்
- நோயுற்ற குழந்தையைத் துணியில் படுத்தியிருக்கின்றமை
- இன்ஸ்பெக்டர் இருக்க கிழிந்த பாயினை எடுத்துப் போட்டமை
- ஒரு வருடமாக ஒருவர் மாறி ஒருவர் சீக்கில் கிடந்தமை
- சவுக்குப் பயிரிடக் கொடுத்த பணத்தை வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்தியமை

(08 புள்ளிகள்)

**(ஆ) பங்களாக்காரரின் நவீன அறிவியலின் வெளிப்பாடுகள்**

- நவீன அறிவியலைப் பயன்படுத்தி விவசாயம் செய்தமை
- மின்சார ஜலம் பாய்ச்சி விஞ்ஞானமுறையில் பயிர்செய்தமை
- சரவணமுத்துவுக்கு குறுகிய காலத்தில் சவுக்குப் பயிரிட்டுக் கொடுத்தமை

(05 புள்ளிகள்)

**(இ) சிறுகதை ஆசிரியர் கதையில் கையாண்ட உத்திமுறைகள்**

- சரவணமுத்துவின் வறுமைநிலையானது குடும்பச் சூழல், அவரது செயல்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றமை
- பொருத்தமான வர்ணனைகள் மூலம் பாத்திரங்களது உணர்வுகள், பின்னணிகள் சித்திரிக்கப்படல்
- பாத்திர உரையாடலோடு கதாசிரியரும் கதை சொல்லியாக கதையை நகர்த்திச் செல்லுதல்
- இயற்கைச் சூழலை உயிரோட்டமாக சித்திரிப்பதன் மூலம் பாத்திரங்களது உணர்வுகள், எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றமை

(07 புள்ளிகள்)

(08 + 05 + 07 = 20 புள்ளிகள்)

**6.** இருதுயரங்கள் - நாடகம்

**(அ) நிகழ்களங்கள் பற்றிய சித்திரிப்பு**

- **டொக்டரின் வீடு**
  - இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல்
  - வைத்திய சாதனங்கள் காணப்படல்
  - கட்டிலில் பிள்ளையின் பிணம் காணப்படல்
  - தலைமாட்டில் குத்துவிளக்கு
  - பிணத்தின் அருகில் துயரத்துடன் டொக்டரின் மனைவி இருத்தல்
  - யன்னலையும் தனது பிள்ளையையும் மாறி மாறி பார்த்தபடி டொக்டர் நிற்றல்

- **மனோகரன் வீடு**
  - வசதியுள்ள வீடாகக் காட்சியளித்தல்
  - இடது அறையின் பின் பகுதியில் மேல் வீட்டுக்கு செல்வதற்கான படிக்கட்டுக்கள் காணப்படுதல்
  - படிக்கட்டுக்கு முன்பாக ஒரு 'ஷோக்கேஸ்' காணப்படல்
  - ஷோக்கேஸ்க்கு மேல் தொலைகாட்சி, டெக் போன்ற பொருட்கள் காணப்படல்
  - இடப்பக்க சுவற்றின் நடுப்பகுதியை அண்டி புத்தக இறாக்கை காணப்படல்
  - நீள மேசை மீது "ஆ(ய்)ஷ்ட்ரே" சில கவர்ச்சிப் பத்திரிகைகள் உள்ளமை
  - நிறுத்தியில் பொருத்தியபடி பெண்ணின் படம் காணப்படல்
  - நிறுத்தியோடு கூடிய மின்விளக்கு காணப்படல்
  - நீளமான செற்றியில் ஒரு தலையணையும் குழம்பிய கோலத்தில் படுக்கை விரிப்பும் காணப்படல். (08 புள்ளிகள்)

**(ஆ) மனோகரன், மனைவி பாமா மீது கொண்ட பாச வெளிப்பாடு**

- தனது மனைவி திடீரென அனூறிசம் என்ற நோயினால் பீடிக்கப்பட்டு உயிருக்கு போராடுவதாகக் கூறி டொக்டரிடம் உடனே வந்து வைத்தியம் செய்யுமாறு வேண்டுதல்.
- தனது மனைவியின் தந்தையும் அனூறிசத்தால் இறந்தமையை கூறி வருந்தியமை
- உயிருக்காகப் போராடிக் கொண்டு இருப்பதாகக் கூறி டொக்டரை வைத்தியம் பார்க்க வரும்படி கேட்டு மன்றாடுதல்
- தான் டொக்டரிடம் வந்த சந்தர்ப்பம் தனது மனைவிக்கு ஏதாவது நடந்திடுமோ என அச்சமடைதல்
- தனது பிள்ளை இறந்த கந்தப்புவின் துயரத்தைப் பொருட்படுத்தாமல் தன் மனைவிக்கு நோய் ஏற்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைப் பெரிதாக நினைத்தல்
- தன் மனைவியைக் காப்பாற்ற மனோகரன், டொக்டரிடம் நியாயங்களை எடுத்துக் கூறல்
- பஞ்சாட்சரத்துடன் தன் மனைவி ஓடிப்போனதால் மிக்க துயரம் அடைதல். (08 புள்ளிகள்)

**(இ) நாடகத்தின் மொழிநடை**

- ஆங்கிலமொழிச் சொற்களை கையாண்டமை
- பிறமொழிச் சிறுகதையின் தழுவல் ஆனாலும் யாழ்ப்பாணப் பண்பாட்டுக்குரிய பேச்சு வழக்குச் சொற்களைக் கையாண்டுள்ளமை
- தேவைக்கு ஏற்ப சிறிய வாக்கியங்கள் கையாளல்
- உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் மொழிநடை உதாரணம் : - எவ்வளவு ஏமாற்றம், துக்கம், கவலை.... (04 புள்ளிகள்)

(08 + 08 + 04 = 20 புள்ளிகள்)

**7.** வீசாதீர் கவிதை

**(அ) யாசகனின் அவல நிலை**

- ஆள்சுருளும் வெய்யிலில் வீதிநடைபாதையில் படுத்திருத்தல்
- உய்யும் வகை தெரியாதவன் , கை இல்லாதவன்
- பசியால் துன்புறுபவன்
- காகம் கொத்தவரும் நிலை
- குறை உயிரோ, செத்த உடலோ என்று தெரியாத நிலை

(07 புள்ளிகள்)

**(ஆ) யாசகன் மீது கவிஞர் கொண்ட ஈடுபாடு**

- குறை உயிரோ, செத்த உடலோ எனக் கவலைப்படுதல்
- தன் துயரங்களை மறந்து தூங்குபவனின் தூக்கத்தைக் குழப்ப வேண்டாம் 'பாவம்' என்று இரங்குதல்
- மெதுவாக காசை வையுங்கள் இல்லாவிட்டால் உம்பாட்டில் செல்லுங்கள் என வழிப்படுத்தல்.
- உய்யும் வகை தெரியா ஓர் மனிதன் எனப் பரிதாபப்படல்
- 'துன்புறுத்தி வீங்கும் பசியால் விழுந்தானோ' எனக் கவலைப்படல்

(07 புள்ளிகள்)

**(இ) யாசகன் தொடர்பாக உதவுவோர் நடந்துகொள்ளவேண்டிய முறை**

- கிட்டப் போய் மெல்லக் குனிந்து இடுக என்பதன் மூலம் யாசகருக்கு கரிசனையுடனும் கருணையுடனும் உதவவேண்டும்
- அலட்சியத்தோடு இரண்டொரு சில்லறையை வீசிவிடுதல் தர்மமன்று
- யாசகரது உணர்வுகள், செயல்களை, மதித்தல்

(06 புள்ளிகள்)
(07 + 07 + 06 = 20 புள்ளிகள்)

**8.** சிறுகுறிப்பு

**(அ) தேம்பாவணி காட்சிப்படலத்தில் மரியாள், சூசை ஆகியோரின் சிறப்புகள்**

**மரியாள்**

- மின்னலைப் போன்ற கன்னித்தாய்
- இயேசுநாதரைப் பெற்ற ஒப்பற்ற அன்னை
- இயேசுவாகிய திருக்குழந்தையை தன் கன்னித் தன்மைக்கு பழுதில்லாமல் பெற்றவள்
- மாலை போன்றவள்
- மின்னொளியை உட்கொண்டு விளங்கிய மென்மையான பாதங்களை உடையவள்
- மின்னொளி நீங்காத கண்களை உடையவள்
- முடிவே இல்லாத இறைவனின் அன்னையாக திகழ்பவள்
- இடையர்களால் போற்றப்படுபவள்
- சாந்தி என்ற இடையர் குலப் பெண்ணின் ஐய வினாக்களுக்கு இறைவனின் பெருமை பற்றி எடுத்துக் கூறும் தெளிவைப் பெற்றிருந்தவள்
- ஆதவனின் ஒளியை ஆடையாக அணிந்தவள்
- ஞான அணிகளை உடையவள்
- தேன் மலர் போன்ற திருவாயினை உடையவள்
- விண் மீன்களை முடியாகச் சூடியவள்

**சூசை**

- இறை குமாரனுக்கும் மரியாளுக்கும் சிறந்த காவலன்
- மாட்சிமை பூண்ட கன்னி மரியாளின் துணைவன்
- வேத உருவினன்
- பெருந்தவ வடிவில் தோன்றிய மன்னன்
- இடையர்களால் வணங்கப்பட்டவன்
- திருக்குழந்தையை தாயுடன் இணைந்து வாழ்த்தியவன் (10 புள்ளிகள்)

**(ஆ) கோயிற் திருப்பதிகத்தில் மணிவாசகர் இறைவன், தன்னை ஆட்கொண்ட விதத்தை வெளிப்படுத்துதல்**

- மெய்ப் பொருளை அறியவிடாது அலைக்கும் வஞ்சகப் புலன்களின் வழியடைத்து என்னுள் அமுத ஊற்றாய் பரஞ்சோதியாய் விளங்குகின்றாய் எனல்
- நான் உன்மீது கொண்ட பேரன்பினால் அடியேனின் ஊனும் உயிரும் ஆனந்தமாய்க் கசிந்துருக என் தகுதிக்கு மேலான இனிய அருட்செல்வத்தை தந்து ஆட்கொண்டாய் எனல்
- எனது உயிருடன் உடலில் உள்ள எலும்பின் உட்துளை எல்லாம் நெகிழக் கூடியதாய் உட்புகுந்து நின்று உருக்கினாய் எனல்
- என் பிறப்பறுக்கும் அருமருந்தாய் இருக்கிறாய் எனல்
- வேதங்களாகவும் வேதங்களின் உட்பொருளாகவும் என் மனத்தினுள் நிலை பெற்றாய் எனல்
- கரையற்ற வெள்ளம்போல் என் சிந்தையினூடு அருள் வெள்ளமாகப் பாய்கின்றாய் எனல்
- என் உடலினை உனக்குரிய இடமாகக் கொண்டாய் எனல்
- மனத்துள் சோதியாய் எழுகின்றாய் எனல்
- உண்மைத் தன்மையை தனக்குள் வெளிப்படுத்தியவன் எனல்
- எனக்குள் நிறைந்தாய் எனல்
- உன் திருவடிப்பேற்றினை அருளினாய் எனல்
- எல்லை இல்லா பரமானந்தம் எனக்களித்தாய் எனல்
- உன்னை எனக்கு தந்தருளி சிறியவனாகிய என்னை நீ ஏற்றுக்கொண்டாய் எனல்

(10 புள்ளிகள்)

**(இ) தொண்டு கவிதையில் விலங்கு, பறவைகளின் நடத்தைகள்**

**பசுக்களின் நடத்தைகள்**

- வெள்ளறுகைச் சப்பித் தின்று களைப்பாறுதல்
- மாலைநேரத்தில் ஊர்நோக்கித் திரும்புதல்
- கொசுக்கள் படையை விரட்ட வாலைச் சாட்டையாக விசுக்குதலும், தனது கொம்பை நிலம் நோக்கித் தாழ்த்தித் தாக்க முற்படுதலும்.

**காக்கைகளின் நடத்ததைகள்**

- காகங்கள் பசுவின் பக்கத்தில் வந்து பழகுதல்
- வெட்கத்தை விட்டு விளையாடல்
- காகங்கள் பசுவின்மீது ஏறி, இருந்து, பசுவின் வால் கூந்தலில் உள்ள பேன்களைக் கொத்தியுண்ணல்
- ஆலமரக்கிளையில் கூடுகட்டுவதற்காக குச்சிகளைச் சேகரித்தல்.
- பசு வாலிலுள்ள பேன்களோடு முடிகளையும் பிடுங்கிக் கொண்டு சொண்டுகளில் காவிக் கொண்டு போதல்.
- மனிதனின் கேள்விக்குப் பதிலாக ஆலமரக் கிளையில் இருந்து அவனைப் பார்த்துச் சிரித்தல்.

(10 புள்ளிகள்)

**(ஈ) இலங்கையாற்றுப்படை கட்டுரையில் இராமாயணம் தொடர்பாக அறிஞர்களது கருத்துக்கள்**

- இராமாயணம் உழவுத் தொழிலை உருவகப் படுத்த எழுந்த காவியம் என ஜக்கோபி கூறியுள்ளமை.
- இராமாயணத்தில் சொல்லப்பட்ட செய்திகளில் உண்மை உண்டென்று மேனாட்டறிஞர் பார்ஜிட்டர் கூறியுள்ளமை.
- தென்னிந்தியாவிற்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கை என பார்ஜிட்டர் கூறியுள்ளமை.
- சர்தார் கீபே என்பவரின் கருத்துப்படி இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள தீவே இராமாயண இலங்கை எனல்

(10 புள்ளிகள்)

**(உ) 'கண்ணம்மா என் காதலி' எனும் கவிதையில் பாரதியார், கண்ணம்மா மீது கொண்ட காதலுணர்வு**

- பின்புறத்தில் வந்து கண்ணம்மா கண்களை மறைக்க அவளது கைகளை தொட்டு, ஆடை வாசனை, ஓங்கிவரும் ஆசை, ஒருமித்த காதலுணர்வு என்பவற்றின் மூலம் அவளை அறிந்தேன் எனல்
- அவள் சிரிக்க அவளது கைகளை விலக்கி திருமித் தழுவியதாக கூறல்
- திரை கடல், வானம், கடலின்நுரை, நீர்க்குமிழி போன்றவற்றில் எவற்றைக் கண்டாய் என கண்ணம்மா வினவ, இவற்றில் எல்லாம் உன் முகத்தையே கண்டேன் எனல்

என்பவற்றின் மூலம் காதலுணர்வு வெளிப்படல்

(10 புள்ளிகள்)

(10 X 02 = 20 புள்ளிகள்)

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, **2026**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
**General Certificate of Education (Adv. Level) Supportive Assessment, 2026**

| | |
|---|---|
| දෙමළ | II |
| **தமிழ்** | **II** |
| **Tamil** | **II** |

**புள்ளியிடும் திட்டம்**

**72 T II**

**1.**

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 6) 5 | 11) 1 | 16) 5 |
| 2) 1 | 7) 1 | 12) 3 | 17) 3 |
| 3) 5 | 8) 2 | 13) 5 | 18) 1 |
| 4) 3 | 9) 3 | 14) 3 | 19) 2 |
| 5) 3 | 10) 2 | 15) 1 | 20) 1 |

(20 புள்ளிகள்)

## பகுதி I

**2.** (அ) சுருக்கம்

- மனிதனின் மிதமிஞ்சிய நுகர்வும் காடழிப்பும் புவி வெப்பமடைதல் உள்ளிட்ட பாரிய சூழலியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன.
- இதனால் பருவகால மாற்றங்கள் ஏற்பட்டு உயிர்ச்சூழல் சமநிலை சீர்குலைந்து வருகிறது.
- மாற்று எரிசக்தி மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.
- எதிர்காலச் சந்ததியினருக்காக இயற்கை வளங்களை மீளுருவாக்கம் செய்து பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் உலகளாவிய கடமையாகும்.

உள்ளடக்கம் - 08
வெளிப்பாட்டுத்திறன் - 05

(8 + 5 = 13 புள்ளிகள்)

(ஆ) கிரகித்தல்

(i) வாசிப்பு என்பது நூலகங்களில் புத்தகங்கள் ஊடாக இடம்பெற்ற நிலை மாறி, இன்று திரைகளின் (Screens) வழியே தகவல்களை உள்வாங்கும் டிஜிட்டல் முறைக்கு மாறியுள்ளது.
(ii) ஆழமான வாசிப்பு என்பது வாசகனைப் பாத்திரங்களோடு பயணிக்கச் செய்து, பிறரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் “பச்சாதாபத்தை“ (Empathy) உருவாக்குகிறது.
(iii) சமூக வலைத்தளங்கள் வாசிப்பை ஆழமானதாக இருக்க விடாமல், மேலோட்டமாக வருடிச் செல்லும் (Skimming) நிலைக்குத் தள்ளியுள்ளன.
(iv) கொட்டிக் கிடக்கும் தகவல்களில் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை விட, எதனைத் தவிர்க்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது.
(v) வாசகனைச் சிந்திக்கத் தூண்டுவதுடன், அவன் அதுவரை கொண்டிருந்த நம்பிக்கைகளை மறுபரிசீலனை செய்ய வைப்பதாக அமைய வேண்டும்.
(vi) பரீட்சை நோக்கத்திற்காக மட்டும் வாசிக்காமல், உலகைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு சன்னலாக வாசிப்பைப் பயன்படுத்த வேண்டும்.

(02 x 06 = 12 புள்ளிகள்)

(13 + 12 = 25 புள்ளிகள்)

**3. கட்டுரை**

**(அ) தற்கால உலகப் போர்களும் சர்வதேச அமைதியும்**

**அறிமுகம்**

- யுத்தம் என்பது அழிவின் அடையாளம் தற்கால உலகம் தொழில்நுட்ப ரீதியாக முன்னேறியிருந்தாலும், பிராந்திய ஆதிக்கப் போட்டிகளால் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளமை பற்றிய விளக்கம்.
- ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ எனும் உயரிய சிந்தனைக்கு நேர்மாறாக இன்றைய உலகியல் போக்கு அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுதல்.

**போர்களுக்கான காரணங்கள்**

- நில ஆதிக்கம் மற்றும் எல்லைப் பிரச்சினைகள், பொருளாதாரப் போட்டி, இயற்கை வளங்கள் (எண்ணெய், எரிவாயு) மற்றும் வர்த்தகப் பாதைகளைக் கைப்பற்றுவதற்கான முனைப்பு.
- ஆயுதப் போட்டி, அணு ஆயுதப் பெருக்கம். வல்லரசு நாடுகளுக்கிடையிலான அதிகாரப் போட்டி.

**யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புகள்**

- உயிர் மற்றும் உடைமை இழப்புகள்: அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுதல் மற்றும் உட்கட்டமைப்புகள் அழிதல்,உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலை ஏற்றம், உணவுத் தட்டுப்பாடு மற்றும் பணவீக்கம் அதிகரித்தல்.
- போரினால் மக்கள் புலம் பெயர்தல், வெடிபொருட்களால் மண், நீர், காற்று மாசடைதல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) தீர்மானங்களை நாடுகள் மீறுதல்.
- வீட்டோ (Veto) அதிகாரத்தைப் பயன்படுத்தி வல்லரசுகள் தமக்குச் சாதகமாகச் செயல்படுதல்.
- மனித நேயத்தை விட தேசியவாதம் மற்றும் ஆதிக்க மனப்பான்மை மேலோங்கி நிற்றல்.

**தீர்வுகளும் மாணவர்களின் பார்வையும்**

- ஆயுதக் குறைப்பு மற்றும் இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள் (Diplomacy) மூலம் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- கல்வி ஊடாக இளைய தலைமுறைக்கு சமாதானம் மற்றும் சகிப்புத்தன்மையை போதித்தல்,போரை ஒழிப்போம், புவியைக் காப்போம்" எனும் விழிப்புணர்வை உலகளவில் பரப்புதல்.

**முடிவுரை**

- அமைதி என்பது போர் இல்லாத நிலை மட்டுமல்ல, அது நீதியும் சமத்துவமும் நிலவும் சூழலாகும், மூன்றாம் உலகப் போர் ஒன்று உருவானால் அது மனித குலத்தின் அழிவிற்கே வழிவகுக்கும் என்பதை உணர்ந்து, உலக நாடுகள் ஒருமித்துச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல்.

**(ஆ) போதைப்பொருள் ஒழிப்பில் இளைய சமுதாயத்தின் பங்கு**

**அறிமுகம்:**

- சமூகத்தைச் சீரழிக்கும் நச்சுப்பொருளுக்கு இளையோர் இலக்காகுதல்.

**பங்கு:**

- விழிப்புணர்வுப் பிரசாரங்கள், நண்பர்களுக்கு ஆலோசனை வழங்கல், ஆரோக்கியமான பொழுதுபோக்குகளில் ஈடுபடல்.
- இளையோர் சமுதாயம் உணராவிட்டால் போதையை ஒழித்து நாட்டை பாதுகாக்க முடியாது

**தீர்வு:**

- குடும்பம், பாடசாலை மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு.

**(இ) சுற்றுலாத்துறையும் இலங்கையின் பொருளாதார மீட்சியும்**

**அறிமுகம்:**

- இலங்கை "கீழ்த்திசையின் முத்து" இயற்கை வளம் மிக்க சுற்றுலாத் தளம்.

**பொருளாதாரப் பங்களிப்பு:**

- அந்நியச் செலாவணி வருவாய், உள்ளூர் கைவினைஞர்களுக்கான சந்தை, வேலைவாய்ப்பு உருவாக்கம்.
- இன்றைய நிலையில் ஏனைய துறைகளினூடாக பொருளாதார மீட்சிக்கு நீண்டகாலமெடுக்கும்
- சுற்றுலாத்துறையினூடாகவே விரைந்து நாட்டைமீட்டெடுக்க முடியும்
  மேம்படுத்தல்:
- உள்கட்டமைப்பு வசதிகள், பாதுகாப்பு உறுதிப்படுத்தல், புதிய சுற்றுலாத் தளங்களை அறிமுகம் செய்தல்.

**(ஈ) ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் "பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை"**

- **அறிமுகம்:** ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் முதன்மையானவர் "பண்டிதமணி" எனச் சிறப்பிக்கப்படுபவர், சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு, நாவலர் வழியில் தொண்டாற்றியவர், யாழ்ப்பாணம் சைவ ஆசிரியர் கலாசாலையின் அதிபராகப் பணியாற்றி, பல சிறந்த ஆசிரியர்களை உருவாக்கியவர்,
  - **நூல்கள்:** "இலக்கியத் தேன்", "சைவநன்னெறி" போன்ற முக்கிய படைப்புகளைத் தந்தவர்.

- **சிறப்பு:** ஈழத்துப் பல்கலைக்கழகங்கள் இவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளன.
- **முடிவு:** பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்து, எதிர்காலத் தமிழ் வளர்ச்சிக்கு வழிகாட்டியாகத் திகழ்பவர்

**(உ) "கெடுவார் கேடு நினைப்பார்" (பழமொழி)**

**கருத்து:**

- மற்றவர்களுக்குத் தீங்கு நினைக்கிறவர்களுக்குத் தீமையே வந்து சேரும்.

**விளக்கம்:**

- எண்ணம் போல் தான் வாழ்க்கை பொறாமை மற்றும் வஞ்சகத்தின் விளைவு அழிவைத் தரும்.

**சான்று:**

- மகாபாரதம் (துரியோதனன்), இராமாயணம் (இராவணன்) போன்ற காவிய உதாரணங்கள்.

| | | |
|---|---|---|
| பொருள் | - | 12 புள்ளிகள் |
| மொழிநடை | - | 08 புள்ளிகள் |
| அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| **மொத்தம்** | **-** | **25 புள்ளிகள்** |

(25 புள்ளிகள்)

## பகுதி II

**4. (அ) பல்லவர் கால பக்தி இலக்கியங்கள்**

**சைவ பக்தி இலக்கியங்கள்**

1. தேவாரம் (1, 2, 3 ஆம் திருமுறைகள்) – திருஞானசம்பந்தர்
2. தேவாரம் (4, 5, 6 ஆம் திருமுறைகள்) – திருநாவுக்கரசர்
3. தேவாரம் (7 ஆம் திருமுறை) – சுந்தரர்
4. திருவாசகம், திருக்கோவையார் (8 ஆம் திருமுறை) – மாணிக்கவாசகர்
5. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (9 ஆம் திருமுறை) – சேந்தனார் உள்ளிட்ட ஒன்பதின்மர்
6. பொன்வண்ணத் தந்தாதி
7. திருக்கைலாய ஞான உலா
8. திருவாரூர் மும்மணிக்கோவை

**வைணவ பக்தி இலக்கியங்கள்**

1. திருச்சந்த விருத்தம்
2. திருப்பள்ளியெழுச்சி
3. அமலனாதிபிரான்
4. பெரிய திருமொழி, திருவெழுகூற்றிருக்கை, திருநெடுந்தாண்டகம், பெரிய திருமடல், சிறிய திருமடல்
5. பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு
6. திருப்பாவை, நாச்சியார் திருமொழி
7. பெருமாள் திருமொழி
8. திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி
9. கண்ணிநுண்சிறுத்தாம்பு பதிகம்

**(ஆ) இலக்கியங்களின் முக்கிய பண்புகள்**

- பக்தி பிரதான பாடுபொருளாகக் காணப்பட்டது.
- முன்னைய கால இலக்கிய மரபுகளின் தொடர்ச்சியை இக்காலத்திலும் காணலாம்.
- பக்தி அனுபவங்களைப் புலப்படுத்த சங்க கால அகத்திணை மரபு கையாளப்பட்டமை.
- கைக்கிளை, பெருந்திணை மரபே அதிகளவில் பயன்படுத்தப்பட்டமை.
- விருத்தப்பா அதிகளவில் கையாளப்பட்டது.

**(இ) சங்க இலக்கியங்கள் ஏதுவாய் அமைந்தமை (மதிப்பீடு)**

- சங்க காலத்தில் கையாளப்பட்ட அகத்திணை இலக்கிய உத்திகள் பல்லவர் காலத்தில் கையாளப்பட்டன.
- சங்க காலத்தில் கையாளப்பட்ட புறத்திணை மரபு, பல்லவர் காலத்தில் தொடர்ந்தவாறு பாத்திரங்களின் வாயிலாகக் கூற்றுகளாக அமைதல்.
- தூது அனுப்புவதாக அமையும் பாடல்கள்.
- சங்க காலத்தில் மடலேறுதல் என்னும் பெருந்திணைக் கூறு, மடல் என்னும் இலக்கிய வடிவமாக வளர்ச்சி கண்டமை.
- சங்க காலப் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு முதலான இலக்கியங்களில் இடம்பெறும் பதிக அமைப்பு முறையானது பல்லவர் காலத்தில் பெருமளவில் காணப்பட்டது.

(15 புள்ளிகள்)

5. (அ) **விஜயநகர நாயக்கர் காலப் பொது மக்கள்சார் இலக்கியங்கள்**

- முக்கூடற்பள்ளு
- திருக்குற்றாலக் குறவஞ்சி
- நொண்டி நாடகம்
- மாறனகப் பொருள்
- மாறனலங்காரம்
- சிதம்பரப்பாட்டியல்
- இலக்கண விளக்கம்

**(ஆ) சிற்றிலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்கள்**

- விஜய நகர நாயக்கர் காலத்தில் பெருமளவு சிற்றிலக்கியம் தோன்ற அக்கால ஆட்சி மாற்றம்
- பிறமொழிக் கலப்பு கலாசாரம்.
- பிறமொழிக் கலாசாரம்.
- உள்நாட்டுப் போர்க்காரணமாகப் புலவர் சிற்றிலக்கியங்களில் அதிகம் செலுத்தினர்.
- அக்கால சமூகம் உயர் அடக்குமுறையில் வாழ்ந்தமை.

**(இ) குமரகுருபரின் கவியாற்றல்**

- பக்தி இலக்கியம் மற்றும் சிற்றிலக்கியத் துறையில் மிகச் சிறந்த கவி ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தவர்.
- இவரின் சிற்றிலக்கியங்களாக மதுரை கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், பண்டார மும்மணிக்கோவை, நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லி மாலை போன்றனவற்றை குறிப்பிடலாம்.

- மதுரையில் திருமலை நாயக்கர் வேண்டுகோளுக்கு இணங்க மீனாட்சியம்மன் மீது பாடிய பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் மீனாட்சி அம்மையே குழந்தையாக வந்து கேட்டதாகக் கூறும் அளவிற்கு கவிநயம் மிக்கது.
- வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிகளைக் கூறும் நீதிநெறி விளக்கம் எனும் இவரது நூலானது இவரது அறிவுத் திறனையும் கவித்திறனையும் ஒருங்கே உணர்த்துகின்றது.

(15 புள்ளிகள்)

**6. (அ) போர்த்துக்கேயர் கால இலக்கியங்கள்**

- ஞானப்பள்ளு (வேதப்பள்ளு)
- அர்ச்சயாகப்பர் அம்மானை
- ஞானானந்த புராணம்

**ஞானப்பள்ளு**

- இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, கத்தோலிக்க மதத்தைப் போற்றி எழுந்தது.
- பள்ளு வடிவத்தின் தொடர்ச்சி. பொதுவாக பள்ளு வடிவத்தில் காணப்படும் சிருங்காரச் சுவை இதிலில்லை.
- இவ்விலக்கியங்களின் பாத்திரங்கள் எருசலேம், ரோம் நாட்டவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள்.
- விதேசியப் பண்பு மேலோங்கியிருந்தது.
- எழுதியவர் அறியப்படவில்லை.
- 1642-இல் எழுதப்பட்டது என்பர்.

**அர்ச்சயாகப்பர் அம்மானை**

- பேதுருப் புலவர் இயற்றியது.
- 1647-இல் எழுதப்பட்டது.
- யாழ்ப்பாணம் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள கிளாலி என்னும் இடத்தில் கோயில் கொண்டுள்ள யாகப்பர் என்னும் புனிதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது.
- பொதுப் பாயிரம், முடிவுரை நீங்கலாக 53 பகுதிகளைக் கொண்டது.
- ஓசை நயமும் கவி வளமும் கொண்ட பாடல்களை உள்ளடக்கியது.

**ஞானானந்த புராணம்**

- தெல்லிப்பளையில் வாழ்ந்த தொம்பிலிப்பினால் எழுதப்பட்டது.
- கிறிஸ்துவ மத விளக்கமாகத் திகழ்கிறது.
- காவியப் பண்புகளைக் கொண்டது.
- 1104 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது.
- இந்நூல் எழுதப்பட்ட காலத்தைக் கூறமுடியாது.

**(ஆ) ஒல்லாந்தர் கால தமிழ் இலக்கியப் போக்கு**

- சமயச் சார்புடையவையாகக் காணப்பட்டன.
- நிலப் பிரபுக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்ட இலக்கியங்களும் தோன்றின.
- பொதுமக்கள் வாழ்க்கைக் கூறுகளை வெளிப்படுத்தக்கூடியவையான பள்ளு போன்ற இலக்கியங்களும் தோன்றின.
- சுதேசிய உணர்வு மிகுதியாக இக்கால இலக்கியங்கள் அமைந்தன.

- சமயச் சார்புடைய இலக்கியங்களில் அகப்பொருள் மரபினைக் கையாண்டுள்ளமை.
- காப்பியம், புராணம், சிற்றிலக்கிய வடிவங்கள் முதலானவற்றை உள்வாங்கி இலக்கியங்கள் பல படைக்கப்பட்டன.
- நாட்டுப்புறக் கூறுகளும் ஆங்காங்கே கையாளப்பட்டிருந்தன.

**(இ) ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் வரத பண்டிதரின் பங்களிப்பு**

- விரதம் சார்பான நூல்களை எழுதியமை - பிள்ளையார் கதை, ஏகாதசிப் புராணம், சிவராத்திரி புராணம்.
- தூது இலக்கியம் படைத்தவர் - கண்ணியவளை குருநாதர் சுவாமி கிள்ளைவிடு தூது.
- ஒல்லாந்தர் காலத்தில் வைத்தியத் துறைக்கு பங்களிப்பு வழங்கியமை - அமுதசாகரம்.

(15 புள்ளிகள்)

**7. (அ) யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர்**

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்த புலவர்களில் ஒருவராக பதுறுத்தீன் புலவர் விளங்குகிறார்.
- இஸ்லாமிய இலக்கியங்களுள் சீறாப்புராணத்திற்கு அடுத்ததாக தமிழ் நல்லறிஞர்கள் போற்றும் இஸ்லாமிய இலக்கியமான முகைதீன் புராணத்தை பாடியவர்.
- நபிநாயகத்தின் பேரரும் சிறந்த மேதையுமான முகைதீன் அப்துல்காதர் ஜீலானியை கதைத் தலைவராகக் கொண்டு இக்காப்பியத்தை பாடினார்.
- இது இரண்டு பாகங்களாக 74 படலங்களாக 3983 திருவிருத்தங்களை உள்ளடக்கியிருந்தது.
- இலங்கையில் தோன்றிய முதலாவது இஸ்லாமிய காப்பியம் பாடியவர் என்பதன் மூலம் முக்கியத்துவம் பெறுகின்றார்.
- இக்காப்பியத்தில் சிலப்பதிகாரம் கம்பராமாயணத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது.
- கம்பன் சடையப்ப வள்ளலை நன்றிகூர்வதுபோல பதுறுத்தீன் புலவரும் நூலின் பல இடங்களில் நூல் வெளிவரக் காரணகர்த்தாவாக இருந்து செய்து மீரான் என்பவரை நன்றி உணர்வோடு நோக்குகின்றார்.
- பதுறுத்தீன் புலவர் காப்பியம் மட்டும் பாடவில்லை. புதுவகையான இலக்கியப் படைப்பான
- “முனாஜாத்து” எனும் இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார்.

**(ஆ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்**

- 18-ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்தவர்.
- ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் தமிழ்மொழியையும் நிலைநிறுத்த பாடுபட்டவர்.
- இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் மிக்கவர்.
- பல்வேறு சிற்றிலக்கியங்கள் பாடியமை
    - ✓ கல்வளை அந்தாதி
    - ✓ மறைசை அந்தாதி
    - ✓ கரவைவேலன் கோவை
    - ✓ பறாளை விநாயகர பள்ளு
    - ✓ நல்லூர் சுப்பிரமணியர் ஊஞ்சல்
    - ✓ நாலுமந்திரி கும்மி
- ஈழத்துக் கவிதைச் செல்நெறியின் ஊற்றுக்கண் என்று பண்டிதமணி முதலானவர்களாற் பாராட்டப்பட்டமை.

**(இ) மங்களநாயகம் தம்பையா**

- இலங்கையின் முதற்பெண் நாவலாசிரியை என்ற பெருமைக்குரியவர்.
- கிறிஸ்துவ சமய நோக்கில் நின்று சமுதாய விமர்சனத்தை வெளிப்படுத்த முனைந்தமையை இவரது "நொறுங்குண்ட இதயம்" எனும் நாவலில் காணமுடிகின்றது.
- ஈழத்தமிழ் நாவல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆரம்பகால நாவல்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.
- 1914-இல் வெளியான "இந்துமதி", "சுபான்மணி", "கண்மணி" போன்ற இருபதிற்கும் மேற்பட்ட நாவல்கள் மூலம் பெண்களின் விடுதலைக் குரல் ஒலிக்கப்படுகின்றது.
- கணவனின் கொடுமைக்கு இலக்காகி இதயம் நொறுங்குண்ட கண்மணி எனும் பெண் கிறிஸ்துவ மதப் பாதிரி ஒருவரது போதனையினால் மன அமைதி பெறுகின்றமையை நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.
- அக்கால சமூகத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள், குடும்ப உறவுகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களை தனது படைப்புக்கள் மூலம் எடுத்துரைத்தார்.
- இலக்கியத்தை சமூக விழிப்புணர்வுக்கான கருவியாக பயன்படுத்தினார்.

**(ஈ) செங்கை ஆழியான்**

- ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் நாவல், சிறுகதை, வரலாற்று ஆய்வு, புவியியல், பதிப்புத்துறை எனப் பல தளங்களில் தடம் பதித்த மிக முக்கியமான ஆளுமை.
- 1960களுக்குப் பின் உருவான ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சியில் இவரது பங்களிப்பு அளப்பரியது.
- ஈழத்து மக்களின் வாழ்வியல், உழைப்பு, சாதிய ஒடுக்குமுறைகள், சீதனக் கொடுமைகள் மற்றும் சமூகச் சிக்கல்களைத் தனது படைப்புகளில் ஆவணப்படுத்தினார்.
- **மண்வாசனைத் தனித்துவம்:** வன்னிப் பெருநிலத்தின் காடுகளையும், யாழ்ப்பாணத்து நன்னீர் நிலைகளையும், கடலோர மக்களின் வாழ்வையும் இவரது நாவல்கள் அச்சு அசலாகப் பிரதிபலித்தன.
- முப்பதுக்கும் மேற்பட்ட நாவல்களையும், எண்ணற்ற சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.
- **வாடைக்காற்று:** பேசாலை மீனவ மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவல், ஈழத்து நாவல் இலக்கியத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததுடன் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.
- **காட்டாறு:** வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிலக்குடியேற்றத் திட்டங்களையும், அங்கு மக்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல்களையும் விவரிக்கும் நாவல்.
- **யானை:** மனிதனுக்கும் மிருகத்திற்குமான உளவியல் போராட்டத்தைச் சித்தரிக்கும் நாவல் (இது 'The Beast' என ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது).
- கடற்கோட்டை, நந்திக்கடல், குவேனி: ஈழத்து வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு எழுதப்பட்ட புனைகதைகள்.
- **சமூக நாவல்கள்:** முற்றத்து ஒற்றைப்பனை, பிரளயம், கிடுகுவேலி, ஒரு மைய வட்டங்கள்.
- க. குணராசா என்ற தனது இயற்பெயரில் ஈழத்து இலக்கிய வரலாறு மற்றும் பொது அறிவு சார்ந்த பல தொகுப்பு நூல்களை வெளியிட்டார்.

**(உ) செ. கதிர்காமநாதன்**

- ஈழத்துச் சிறுகதை, நாவல் சார் புனைகதை வளர்ச்சிக்கும், மொழிபெயர்ப்புத் துறைக்கும் பணியாற்றியுள்ளார்.
- 1959-இல் தனது பதினெட்டாவது வயதில் எழுத்துத்துறையில் புகுந்த இவர் இறுதிவரை எழுத்தைக் கைவிடவில்லை.
- இவர் கிராமிய மக்களது சமூக, பொருளாதார அவலங்களையே பெரும்பாலும் சிறுகதைகளாகப் படைத்துள்ளார்.
- எல்லாம் உனக்காக என்ற சிறுகதை மூலம் கலைச்செல்வி இதழ் ஊடாக சிறுகதை உலகில் பிரவேசித்தார்.
- நான் சாகமாட்டேன் என்ற குறுநாவலையும், கொட்டும் பனி, மூவர் கதை, வெறும் சோற்றுக்கே வந்தது போன்ற நூல்களையும் படைத்துள்ளார்.

(15புள்ளிகள்)

**8**. (அ)

(i) ஆடுகள் மழையில் நனைந்தன - தன்வினை
தண்ணீர் விசிறி நிலத்தை நனைத்தனர் - பிறவினை

(ii)

❖ **படர்க்கைத் தற்சுட்டுப் பெயர்**
மதிய உணவைத் தான் ஏற்பாடு செய்வதாகத் தலைவர் கூறினார்

❖ **இடைச்சொல்**
திருடர்கள்தான் கதவை உடைத்திருக்கவேண்டும்

(iii) பரி - நரிகளைப் பரிகளாக்கிய காலம் மலையேறிவிட்டது.
பறி - சந்தைக்கு எடுத்துவரப்பட்ட பறிகளில் மீன்கள் நிறைந்துகிடந்தன.

(iv) முதல்வினை - கமலாதேவி தன் பிள்ளைகள் மீது நிறைந்த அன்பு கொண்டுள்ளார்
துணைவினை - வயோதிபத் தாயை சுகந்தனே பார்த்துக்கொள்கிறான்.

(v) 'தகவல்களையே தரப்படவேண்டும்' என்பதில் இலக்கண வழு உள்ளது. அதாவது செயப்படுபொருள் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொல்லுடன் செப்பாட்டுவினை இணைந்துவந்திருப்பது வழு.

பத்திரிகைச் செய்திகளில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களே தரப்படவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

(10 புள்ளிகள்)

(ஆ)

(i) **தொழிற்பெயர்**

வினையடியாகப் பிறந்து வினை நிகழ்வினை அல்லது நிகழாமையை உணர்த்தும் பெயர்ச்சொல். இது வினைபுரியும் கர்த்தாவை உணர்த்துவதில்லை.
இது மூன்று வகைப்படும்

1. காலம் காட்டும் தொழிற்பெயர்

   வினையடி + கால இடைநிலை + தொழிற்பெயர் விகுதி (அது / மை) என்ற அமைப்பினையுடையவை. உ – ம்: போகிறது

2. காலம் காட்டாத தொழிற்பெயர்

   வினையடி + தொழிற்பெயர் விகுதி (தல் / த்தல் / அல்) என்ற அமைப்பினையுடையவை. உ- ம்: போதல்

3. எதிர்மறைத் தொழிற்பெயர்

   வினையடி + எதிர்மறை இடைநிலை + தொழிற்பெயர் விகுதி (அது / மை) என்ற அமைப்பினையுடையவை. உ – ம்: போகாமை

(ii) **ஏவல் வினைமுற்று**

முன்னிலையில் இருப்போரை வினையை நிகழ்த்துமாறு ஏவுவதற்குப் பயன்படும் வினை. இது ஏவல் ஒருமை, ஏவல் பன்மை என இருவகைப்படும். அவை ஒவ்வொன்றும் உடன்பாடு, எதிர்மறை என இரண்டாக அமையும்.

உ-ம்: செய், செய்யாதே, செய்யுங்கள், செய்யாதீர்கள்

**வியங்கோள் வினைமுற்று**

வேண்டல், விதித்தல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருளில் வரும் வினை. முன்னைய காலங்களில் க, இய, இயர் முதலிய வியங்கோள் விகுதிகளைப் பெற்றுவந்தாலும் இன்று க, அட்டும் முதலிய விகுதிகளையே பெரும்பாலும் பெற்றுவருகிறது.

உ-ம்: தருக, எழுதுக, வாழ்க, மலரட்டும், ஒழிக

(iii) **செயப்படுபொருள் குன்றா வாக்கியம்**

செயப்படுபொருள் குன்றா வினையைப் பயனிலையாகக் கொண்ட வாக்கியம். இவ்வகை வாக்கியத்தில் குறைந்தபட்சம் இரண்டு பெயர்த் தொடர்களும் ஒரு பயனிலைத் தொடரும் இருக்கும்.

உ-ம்: எமது ஆசிரியர் இலக்கியப் பாடத்தைச் சுவையுடன் கற்பிப்பார்.

**செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்**

செயப்படுபொருள் ஏற்காத வினைச்சொற்களை (செயப்படுபொருள் குன்றிய வினைகளை) பயனிலையாகக் கொண்ட வாக்கியங்கள். இவ்வகை வாக்கியங்கள் குறைந்தபட்சம் ஒரு பெயர்த் தொடரையும் ஒரு பயனிலைத் தொடரையும் கொண்டு வரலாம்.

உ-ம்: அரக்கன் பயங்கரமாக சத்தமிட்டான்

(5 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)